2004 பிப்ரவரி 10]

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுவத்தூர் கிராமத்தில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுவத்தூர் கிராமத்தில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத்தர திட்டங்கள் ஏதும் அரசிடம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: இந்தச் சட்டமுன்வடிவு, இன்று காலையிலேதான் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இதைப் படிப்பதற்கு கூட அவகாசம் கிடைக்கவில்லை. இதை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, ஏற்கெனவே சொல்லப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்)

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே வந்து, இங்கே சட்டமுன்வடிவை நான் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன் என்று கூறுவதும், உடனடியாக அறிமுகம் செய்கிறேன் என்று சொல்வதும் சரியான முறையல்ல. அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS